ஸ்ரீ ஹரி:


தனி பிரதி
₹15
ஆண்டு சந்தா
₹180


# மதுரமுரளி


வேணு 23 | கானம் 11 ஜூன் 2018





Delivered by India Post
www.indiapost.gov.in


மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன் வெளிவரும்
தெய்வீக மாதப் பத்திரிகை



சென்னை அண்ணா நகரில் ஸ்ரீ பலராமன் அவர்களின் இல்லத்தில் சீதா கல்யாணம், 20 மே 2018

பகவான் யோகி ராம்சுரத்குமார் கோவில் திறப்பு, அருப்புக்கோட்டை, 3 மே 2018





# மதுரகீதம்

## ஒவ்வொரு அணுவிலும்

**ராகம்: ஸிம்மேந்திர மத்யமம்**

**தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஒவ்வொரு அணுவிலும் ப்ரேமையுடைய ராதை**
**அனுராதா தினத்தில் அவதரித்தாள்**
**(ஒவ்வொரு)**

**சரணங்கள்**

**கண்களில் ப்ரேமை வழியும் ராதை**
**அந்த கண்ணனிடமே ப்ரேமை கொண்டாள்**
**மனதில் ப்ரேமை ததும்பும் ராதை**
**மனஸிஜ மாதவனிடம் ப்ரேமை கொண்டாள்**
**(ஒவ்வொரு)**

**மொழியில் ப்ரேமையை பொழிந்திடும் ராதை**
**குழலூதும் கண்ணனிடம் ப்ரேமை கொண்டாள்**
**ஸர்வாங்கங்களிலும் ப்ரேமை மிளிர்ந்திடும் ராதை**
**ஸர்வாங்க சுந்தர கண்ணனிடம் ப்ரேமை கொண்டாள்**
**(ஒவ்வொரு)**


---

**முன் அட்டை:**

**பக்த விஜயம் உபந்யாசம், நாரத கான சபா, சென்னை**

**பின் அட்டை:**

**கோசாலை, சேங்கனூர்**



# பொருளடக்கம்


மதுரமான மஹனீயர்-266..........5

கேள்வி பதில்.....................................7

புண்டரீகாக்ஷன்..................................................8

பஜனம்-நாதோபாஸனம் என்ன வித்தியாசம்?.......................9

உண்மையான குரு க்ருபை.........................................12

ஆனந்தத்திலும் ஆனந்தம் - பஜனானந்தம்!!................................14

பாலகர்களுக்கு ஒரு கதை...............................................18

சத்சங்க செய்திகள்..................................................22

மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை.................................27

பாரம்பரிய பொக்கிஷங்கள்...............................29

சைதன்ய மஹாப்ரபு...........................31

படித்ததில் பிடித்தது...............34


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME

# மதுரமான மஹநீயர்

- டாக்டர் ஆ பாக்யநாதன்
(ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
அந்தரங்க செயலாளர்)

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், கடந்த மாதம் மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடந்த வசந்தோத்சவ சமயத்தில் கூறிய சில அருமையான விஷயங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

“பெரியவர்களுடன் பேசிக் கொண்டிருந்தால் ‘அந்தக் காலம் எப்படி இருந்தது, இப்பொழுது எல்லாம் காலம் மாறிவிட்டது’, என்பார்கள். அது போல், அந்தக் காலத்தில் அரசர்கள் நேர்மையுடன் ஆட்சி செய்தார்கள். தேனும் பாலும் ஓடியது என்பார்கள். உண்மையில் நமக்குத் தெரிந்த வரலாறு வரையில் உலகம் எப்பொழுதும் ஓரே மாதிரியாகத்தான் உள்ளது. புராண காலத்திலும் வேனன், ஹிரண்யகஷிபு, ஹிரண்யாக்ஷன் இருந்ததைப் பார்க்கின்றோம். சரித்திர காலத்திலும் ஹிட்லர், இடியமின் போன்றவர்களையும் பார்க்கின்றோம். நம் நாடே அந்நியர்களின் படையெடுப்பின் போதும், அந்நியர்களின் ஆட்சியின் பொழுதும் பட்டப்பாடு சொல்லி மாளாது. இப்பொழுதும் உலகத்தில் பல வன்முறை சம்பவங்களையும் கேள்விப்படுகின்றோம். நல்ல அரசர்களும் சுயநல அரசர்களும் உலகம் முழுவதும் அவ்வப்பொழுது வந்து கொண்டிருக்கின்றார்கள். உலகம் என்றும் அமைதியாகவும் இருந்ததில்லை, என்றும் மோசமானதாகவும் இருந்ததில்லை. மாறி மாறி வந்து கொண்டு இருக்கின்றது என்பது தான் உண்மை. ஏன் இப்படி?

நம்மைப் படைத்த பகவான் நமக்கு முதுமை என்ற ஒன்றைத் தராமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். முதுமையை நினைத்தாலே பயமாக இருக்கின்றது, ஒவ்வொருவருக்கும். ஆனாலும் பகவான் முதுமையைப் படைத்துள்ளான். அதுபோல், இவ்வளவு அழகாகவும் ஆச்சர்யமாகவும் மனிதர்களைப் படைத்தானே, அவனுக்கு வியாதி என்ற ஒன்றைப் படைக்காமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆனாலும், புது புது வியாதிகள் வந்துக் கொண்டே இருக்கின்றது. சமூகமும் இப்படித்தான் உள்ளது.

நம்மை இறைவன் படைத்ததே முக்தி அடைவதற்காக. உடலில் வியாதியும் மூப்பும் இருப்பதினால்தான் உடல் எடுப்பதில் ஒரு வெறுப்பு வரும். சமூகத்தில் இவ்வளவு அவலங்கள் இருந்தால்தான் இந்த உலகத்தில் பிறப்பதில் வெறுப்பு வரும். கொஞ்சம் கொஞ்சமாக இந்த வெறுப்பு வைராக்யமாக மாறி அவனுக்குப் படைத்தவனை நோக்கித் திரும்ப ஆசை வரும். அது பக்தியாக மாறி முக்தியைத் தரும்.'' என்றார், ஸ்ரீ ஸ்வாமிஜி.

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத மொழிகள்

நம்முடைய மனது தூய்மையாக இல்லை என்று நமக்கே தெரியும். இருந்த போதிலும் நாம் சிறிது நேரம் பகவானை தியானம் செய்தால் மனதில் ஒரு நிம்மதி கிடைக்கின்றது. அது நமக்கு மன சாந்தியைத் தருகின்றது.
அப்படி இருக்கையில் நிர்மலமான மனதுடன் கூடிய மஹான்கள் எப்பொழுதுமே பகவானை நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எப்பொழுதுமே ஒரு ஆழ்ந்த அமைதியையும் ஆனந்தத்தையும் அனுபவிப்பதில் வியப்பென்ன இருக்க முடியும்?

---

ஞானிகள் உலகத்தில் இருந்தாலும் அவர்களை உலகம் எப்படி ஒட்டுவதில்லையோ, அது போலவே சிலர் எந்த ஸத்ஸங்கத்திற்கு வந்தாலும் அவர்களுக்கு அது ஒட்டுவதில்லை.

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

**ராதே ராதே ஸ்ரீஸ்வாமிஜி! சமீபத்தில் நான் ஒரு ஜோதிடரிடம் சென்றேன். அவர் எனது வாழ்க்கையைப் பற்றிய விவரங்களை மிகச் சரியாகவே கணித்துக் கூறினார். எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது? இது எப்படி சாத்தியம்?**

பகவானின் இந்தப் படைப்பில் எல்லாமே ஒரு கணக்கின்படி தான் நடக்கிறது. கோள்கள் சூரியனைச் சுற்றி வரும் நேரம், பாதை, பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ளும் காலக்கட்டம், சந்திரனின் தேய்பிறை வளர்பிறை காலங்கள், அவ்வப்பொழுது நிகழும் கிரஹணங்கள் போன்ற நிகழ்வுகள், பயிரிட்டால் அறுவடை செய்ய ஆகும் காலம் என்று, எல்லாமே ஒரு கணக்கின்படியே நடக்கிறது. ஆகவே தான் இந்தப் படைப்பில் ஒரு ஒழுங்கு இருக்கிறது. இப்படி ஒரு கணக்கில் இந்தப் படைப்பு அடங்காவிடில் குளறுபடியே நேரும் அல்லவா?

எவ்வாறு இந்தப் படைப்பில் எல்லாம் ஒரு தெய்வீக கணக்கின்படிதான் இயங்குகிறதோ, அவ்வாறு தான் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கையும். ஒரு ஜீவன் எப்போது பிறக்க வேண்டும், எப்படி வளர வேண்டும், எப்போது இந்த உடலை விட்டு நீங்க வேண்டும் என்னும் விஷயங்களும், இறைவனின் ஒரு கணக்கிற்கே உட்பட வேண்டுமல்லவா? இல்லையென்றால் நினைத்துப் பாருங்கள் உலகமே ஒரு மஹத்தான குளறுபடியாகிவிடும் அல்லவா?

ஒவ்வொரு ஜீவனும் பிறக்கும் நேரத்தை வைத்துக் கொண்டு, அந்த ஜீவனின் கணக்கை கண்டறிகிறது ஜோதிடம் என்ற அந்த Science. கணக்கின்படி, ஒவ்வொரு ஜீவனின் வாழ்வு என்று ஆனபின், எவ்வளவிற்கு எவ்வளவு கணக்கு சரியாக அமைகின்றதோ, அந்த அளவிற்கு ஒருவனின் வாழ்க்கையைப் பற்றி ஜோதிடத்தினால் சரியாக கணிக்க முடிகிறது.

ஆகவே, ஜோதிடம் என்ற scienceஐ பார்த்து தான் நாம் வியப்படைய வேண்டும்!



# புண்டரீகாக்ஷன்

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

**“புதிதாக ஒரு இடத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு கோவில் கட்டுவதற்கான ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டிருந்தன. அதற்கான அழகான ஒரு ஸ்வாமி அர்ச்சாவதாரமாக அங்கு எழுந்தருளி இருந்தார். அந்த ஸ்வாமி அமர்ந்த திருக்கோலத்தில் இருந்தார். தவக்கோலம் போன்று வீற்றிருந்தார். சிறிது நேரம் அந்த அர்ச்சாவதாரத்தின் அருகில் அமர்ந்திருந்து, அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.**

**இரவு வழக்கமாக நான் த்யானத்திற்கு அமர்ந்தவுடன் அந்த அர்ச்சாவதாரத்தின் முகமே என்னுடைய த்யானத்தில் வந்து கொண்டிருந்தது. அந்த அர்ச்சாவதாரத்தின் முகம் அழகாக இருந்தது. நம்முடைய பெருமாளின் முகம் போலவேதான் இந்த அர்ச்சாவதாரத்தின் முகம் உள்ளது. வீபூதி, திருமண் தான் வித்தியாசமோ? வேறு என்ன வித்தியாசம்? என்று என்னுடைய மனதில் கேள்விகள் எழ ஆரம்பித்தன. அப்பொழுது ஒரு க்ஷணம் பெருமாள் என் இதயத்தில் ப்ரத்யக்ஷம் ஆனார். அவருடைய கண்களை எனக்கு நன்றாகக் காண்பித்தார். மலர்ந்த, அழகான, தெய்வீகமான தாமரையை ஒத்திருந்தது, அது. புண்டரீகாக்ஷன் என்பது ‘தான்’ மட்டும் தான் என்பதை உணர்த்தினார். அப்பொழுது அவருடைய நெற்றி, அதரம், காதுகள், கன்னம், நாசி, அலகபாரம் எல்லாமே மிகவும் அழகாக இருந்தது என்பதை சொல்லவும் வேண்டுமோ!”**

# பஜனம்-நாதோபாஸனம் என்ன வித்தியாசம்?



**ஸ்ரீ விஷ்ணுப்ரியா**

பகவானை அடைய எவ்வளவோ மார்க்கங்கள் உள்ளன. அவைகளுள் எளிமையானதும் இனிமையானதுமான மார்க்கம் பக்தி மார்க்கம் தான். 'பக்த்யா ஸுலபோ பகவான்' என்றபடி பக்திக்கு பகவான் ஸுலபமாக கிடைப்பது போல் வேறெதர்க்கும் கிடைப்பதில்லை. பக்தி செய்வது நமக்கும் ஸுலபமாக உள்ளது.

பக்தியிலேயே பஜனம், நாதோபாஸனம் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. நாம் செய்வது பஜனம் அல்லது சங்கீர்த்தனம். மற்றொன்று 'சங்கீதம்' அல்லது நாதோபாஸனம். நாதோபாஸனையும் பஜனையும் எப்படி வித்தியாஸப்படும் என்று நமது குருநாதர் ஸமீபத்தில் பெங்களூரில் சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் செய்த தியாகராஜர் உபன்யாஸத்தில் அழகாக எடுத்துக் கூறினார். அது என்ன என்று பார்ப்போம்.

வேத மந்த்ரங்கள் பல உள்ளன. புருஷ ஸூக்தம், ருத்ரம், சமகம், துர்கா ஸூக்தம், காயத்ரி மந்த்ரம் என்று எவ்வளவோ வைதீகமான மந்த்ரங்கள் உள்ளன. இந்த மந்த்ரங்களை ஒரு நல்ல குருவிடமிருந்து உபதேசம் வாங்கிக் கொண்டு, அவைகளின் ஸ்வரம், modulation எல்லாம் மாறாமல் ஜபம் செய்தால் தான் பலன் உண்டு. கொஞ்சம் ஸ்வரம் மாறினாலும் விபரீத பலன் ஏற்பட்டு விடும். மந்த்ரம் என்றால் என்ன? சில அக்ஷரங்களை ஒரு விதமாக அமைத்துக் கொடுப்பது தான் மந்த்ரம். அதற்கு ஒரு அர்த்தமும், பலனும் இருக்கும். அத்தகைய மந்த்ரங்களை அறிவுப் பூர்வமாக கண்டு பிடிக்காமல், ஆகாசத்தில் இருக்கும் சப்தங்களைக் கொண்டு அனுபவப் பூர்வமாக நமக்குக் கொடுத்துள்ளார்கள் ரிஷிகள். மந்த்ரங்களுக்கு இவ்வளவு நியமங்கள் இருக்கின்றன அல்லவா? ஆனால், ஸ்தோத்ரங்களுக்கு அவை கிடையாது. இப்பொழுது, நாம் நம் வீட்டில், காலையில் வாசல் தெளித்துக் கோலம் போடும் போது, தீபம் ஏற்றும் போதெல்லாம் ஏதாவது ஸ்தோத்ரம் சொல்லிக் கொண்டே செய்வோம் அல்லவா?

‘அங்கம் ஹரே புலகபூஷணம்....’ என்று, கனகதாரா ஸ்தோத்திரத்தை சொல்லிக் கொண்டே செய்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஸ்தோத்ரத்தை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் சொல்லுவோம். அதற்கு ஸ்வர நிர்ணயம் எல்லாம் கிடையாது. ஒரே மாதிரி தான் சொல்ல வேண்டும் என்பதில்லை. அவரவர்களுக்குப் பிடித்த ராகத்தில், பிடித்த விதத்தில் சொல்லலாம். ஒரே ஸ்தோத்திரத்தைப் பத்து பேர்கள் பத்து recording கொடுத்தார்கள் என்றால் அது பத்து விதமாகத் தான் இருக்கும். மந்திரங்கள் ஸ்தோத்திரங்கள் ஆகிய இரண்டுமே அக்ஷரங்கள் தான். ஆனால், ஸ்தோத்திரங்களை மந்திரங்களைப் போல சொல்ல வேண்டியதில்லை.

இப்பொழுது, பஜனம் என்பது ஸ்தோத்ரம் சொல்வது போன்றது. நாதோபாஸனம் என்பது மந்த்ர உபாஸனம் போன்றது. பஜனையில், நாம் ஒரு பாட்டைப் பாடும் பொழுது பக்தி பாவத்துடன் பாட வேண்டும். ஓரளவு சங்கீத ஞானத்துடன் பாடினால் போதும். நிறைய ஸங்கீதம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு நாமாவளி பாடுவதும் பஜனம் தான். அல்லது மஹான்கள் பாடிய கீர்த்தனங்களை, simple ஆக நமக்குத் தெரிந்த அளவு சங்கீதத்தில் பாடுவதும் பஜனை தான். தியாகராஜ ஸ்வாமிகளே, அவர் எழுதிய கீர்த்தனங்களில், இவையெல்லாம் ‘திவ்ய நாம’ கீர்த்தனங்கள் என்று சிலவற்றை வைத்திருக்கிறார். திவ்ய நாம கீர்த்தனங்களில், ‘சக்கனி ராஜ...’ என்ற கீர்த்தனமோ, பஞ்ச ரத்ன கீர்த்தனங்களோ சேராது. ஏனென்றால், பஜனையில் எளிமையாக, ஸுலபமாகப் பாடக் கூடிய கீர்த்தனங்களை மட்டுமே திவ்ய நாம கீர்த்தனத்தில் சேர்த்துள்ளார்.

ஆனால், நாதோபாஸனத்திற்கு ஸ்வர நிர்ணயம் உண்டு. மந்த்ரங்களில் எவ்வளவோ உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் இருக்கின்றன. ஆனால், நாதோபாஸனத்தில் ஏழு ஸ்வரங்கள் தான் - "ஸ ரி க ம ப த நி" என்பவையே அவை. இந்த ஏழு ஸ்வரங்களின் பல் வேறு permutation combination ல் 72 மேளகர்தா ராகங்களும், அதன் ஜன்ய ராகங்களையும் ஏற்படுத்தி நாதோபாஸனம் செய்யப் படுகின்றது. அத்தகைய அழகிய நாதோபாஸனத்தில் பாவம் மட்டும் முக்கியம் இல்லை; ஸ்வரங்களும் முக்கியம். ஆகையால் தான், எந்தெந்த மஹான்கள் நாதோபாஸனம் செய்துள்ளார்களோ, அந்த மஹான்களுடைய கீர்த்தனங்கள் எல்லாம் ஸ்வர நிர்ணயத்துடன் கூடியதாக இருக்கும். அத்தகைய கீர்த்தனங்களை ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி பாட முடியாது. எல்லா வித்வான்களும் ஒரே மாதிரி தான் பாடியாக

வேண்டும். மனோதர்மப்படி பாட்டை பாட முடியாது. அத்தகைய நாதோபாஸனம் செய்த மூன்று பெரிய மஹான்கள் தான் தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீக்ஷிதர், மற்றும் ச்யாமா சாஸ்த்ரிகள்.

அவர்கள் சங்கீதத்தினால் பகவானை ஆராதித்தார்கள். இந்த நாதோபாஸனம் என்ற மார்க்கத்திற்கு இரண்டு குரு இருக்கிறார்கள். ஒன்று ஹனுமான், மற்றொன்று நாரதர். இவர்கள் தான் ஸங்கீதம் எனும் சாஸ்திரத்தை தேவலோகத்திலிருந்து நமக்கு பூலோகத்தில் கொண்டு கொடுத்து அருளியுள்ளார்கள். இப்போது அவரவர்களின் குருவிற்கு ஏற்றபடி சங்கீத வித்வான்களுக்குள்ளே எப்படி பல வித பாணி உள்ளதோ, அதே போல், முதன்முதலாக சங்கீதத்தில் இரண்டு மதம் இருந்தது. ஒன்று ஹனுமத் மதம் மற்றொன்று நாரத மதம். இரண்டு பேர்களும் ஒவ்வொரு விதமாக ஸங்கீதத்தை நிர்ணயித்துள்ளார்கள். முதன்முதலில் ‘ஸங்கீத ரத்னாகரம்’ என்ற க்ரந்தத்தை செய்து ஸங்கீத சாஸ்த்ரத்தை விவரித்தவர் வங்காளத்தை சேர்ந்த ‘சார்ங்கதேவர்’ எனும் மஹான். இப்படியாக இந்த நிர்ணயங்களுக்கு உட்பட்ட ஸங்கீதத்தினால் பகவானை ஆராதிப்பது தான் ‘நாதோபாஸனம்’ எனும் மார்க்கம்.

HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI

DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,
Old no.72, New No 460,
TTK Road, Alwarpet, Ch – 18
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com,
www.chennaiendocrine.com

# உண்மையான குரு க்ருபை

"எனக்கு பதவி உயர்வு பல ஆண்டுகளாகத் தட்டிச் சென்று கொண்டே இருந்தது. எனது குருவிடம் ப்ரார்த்தனை செய்தேன். இந்த வருடம் எனக்கு அது கிட்டியது. எனது குருவின் க்ருபையே க்ருபை!" என்று, ஒருவர் சொன்னார்.

கொஞ்சம் சிந்தனை செய்வோமா? இவர் போன்று பலர் பணம், பட்டம், பதவி, புகழ், சுகமான வாழ்க்கை என்ற இவைகளையே குரு க்ருபைக்கு அடையாளமாகச் சொல்லுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம் அல்லவா? இவை எல்லாமா உண்மையான குரு க்ருபை? பணம், பட்டம், புகழ், காமம் என்று இவைகளையே நாடுவது மீண்டும் மீண்டும் பிறவிப் பிணியில் அல்லவோ தள்ளும்? இவை எப்படி உண்மையான குருக்ருபையாகும்?

ஒருவன் சிறைச் சாலையில் அடைப்பட்டு இருக்கிறான். அவனுக்கு வேளைக்கு வேளை சாப்பாடு போட்டு அந்தச் சிறைச்சாலையிலேயே அவனுக்கு சில வசதிகள் செய்து கொடுத்து, அந்தச் சிறைச்சாலையில் அவனை பிரபலப்படுத்தி வைப்பது என்பது உண்மையான அருளாகுமோ? சிறையிலிருந்து அவனை விடுவித்து விட்டால்தானே உண்மை அருள்! அதுபோல், மேலும் மேலும் பிறப்பு இறப்பு என்ற சுழற்சியில் அமிழ்த்துவதா நிஜமான குருக்ருபை?
உண்மையான குருக்ருபை யாது?

தெய்வ க்ருபை என்பது கூட உலக விஷயத்தில்தான் முக்கியமாக வேலை செய்யும். ஒருவன் சம்சாரமாகிய பிறவிக்கடலில் இருந்து கரையேற வேண்டும் என்றாலோ, அது குருக்ருபையால் மட்டுமே சாத்தியமாகும்.

ஆன்மீக வாழ்க்கையில்தான் இருக்கின்றோம் என்று எண்ணம் பலருக்கும்! 'பக்தி' என்றால் என்ன என்றுகூட சரியாகத் தெரியாது. தான் இஷ்டப்படி செய்வதை 'பக்தி' என்று நினைத்துக் கொண்டுவிடுவார்கள். பக்தி என்றாலே அடிக்கடி கோயிலுக்குச் சென்று வந்து, நிறைய பித்ரு கர்மாக்களை மட்டும் செய்து, அடிக்கடி ஹோமம் வளர்ப்பது தான், வெளிச் சின்னங்களை தரிப்பதுதான் என்ற எண்ணம் தான் பலருக்கும். இவை அனைத்தும் முக்கியம்தான். ஆனால், இவை

பக்தி ஆகிவிடுமா என்ன? இறைவன்பால் காரணமேயற்ற, தங்கு தடையில்லாத அன்புதானே பக்தி; சுயநலம் சிறிதுமற்ற ப்ரேமையல்லவோ பக்தி! இப்படி தப்பும் தவறுமாக பக்தியை புரிந்து கொள்ளாமல், உண்மையான பக்தியின் லட்சணத்தை குருக்ருபை மூலம் மட்டுமே அவரது ஸத்ஸங்கத்தினால் அறிய முடியும் அல்லவா? 'ஞானம்' என்பது புத்தி அளவில் இருப்பதே பூரண நிலை என்றுகூட நினைப்பவர்களும் உண்டு. ஏதோ புத்தகங்களைப் படித்து, "எல்லாம் ஒன்றுதான் சார்!" என்று சொல்லிக்கொண்டு, ஒரு நியமமில்லாத வாழ்க்கையை நடத்துவதைக்கூட ஞான மார்க்கம் என்று நினைப்பவர் எவ்வளவு பேர்! இல்லையேல் ஏதோ அழுக்குத் துணி அணிந்து, தூய்மையாய் இல்லாமல், வேலை ஏதும் செய்யாமல், ஒரு அரிசி மூட்டையைப் போல் சோம்பேறியாக வாழ்வை நடத்துபவரைக்கூட வைராக்யசாலி என்று பார்ப்பவர் எவ்வளவு பேர்!!

இப்படி ஒரு கோளாரான நிலையில், ஒரு உத்தம குருவின் க்ருபைதான் முதலில் உண்மையான பக்தி,ஞானம், வைராக்கியம் என்றால் என்ன என்றத் தெளிவைக் கொடுக்கும். அதற்கும் மேல் அந்த பக்தியை அடைவதற்கான தாகத்தையும் குருக்ருபையினாலேயே சாத்தியமாகும்.

ஒரு ஜீவனை பூரணனாக்கும் ப்ரேம பக்தியையும், நிர்மலமான ஞானத்தையும், விஷய வைராக்யத்தையும் இந்த குரு க்ருபையே சாதித்துக் கொடுக்க வல்லது.

ஸ்ரீ கண்ணனின் அவதார காலத்தில், கோபர்கள் அகாசுர வத லீலையின் போது, மலைப் பாம்பான அகாசுரனை ஒரு பாம்பு மலை என நினைத்து அவனது வாயினுள் நுழைந்து விஷ ஜ்வாலையால் ப்ராணனை இழந்தனர். பகவான் கண்ணன் அவர்களின் சிரத்தின் மேல் தனது அமிர்த கரத்தை வைத்து அவர்களை விஷத்திலிருந்து காப்பாற்றினான். ஒரு குருநாதரோ ஒரு பக்குவமடையாத சீடனின் இதயத்தில் க்ருபை என்ற தனது அமிர்தமான கரத்தை வைத்து உலக விஷயம் என்ற விஷத்தையே போக்கி, -ஞான- வைராக்ய பூர்ணனாக ஆக்கி, இறைவனிடம் சேர்க்கின்றார்.

தனது சீடனுள் உள்முக மாற்றத்தை உண்டாக்குவதே உண்மையான குரு க்ருபை. True Grace of the Guru is when he causes an inner transformation in the disciple.



# ஆனந்தத்திலும் ஆனந்தம் - பஜனானந்தம்!!

- ஸ்ரீ M.K. ராமானுஜம்

நாம் ஒவ்வொருவரும் பகவானிடம் பக்தி செய்கின்றோம். அப்படி பக்தி செய்யும் நாம் பகவானிடம் அன்றாட தேவைகளை உத்தேசித்து அவ்வப்பொழுது பிரார்த்தனைகளும் செய்து வருகின்றோம். ஏதாவது பிரார்த்தனை இருந்தால் மட்டுமே பக்தி செய்பவர்களும் உண்டு. அப்படி நாம் செய்யும் பிரார்த்தனைகள் நிறைவேறாவிட்டால், அல்லது நாம் எதிர்பாராத கஷ்டங்கள் வந்துவிட்டால், ‘கடவுள் என்பவர் உண்மையிலேயே இருக்கின்றாரா?’ என்று, நமக்கு ஸந்தேகம் வந்துவிடும். அல்லது, கடவுளை நிந்திக்க ஆரம்பித்து விடுவோம். இதுதான் நம்முடைய நிலை, உண்மையும் கூட.

இப்படி இருக்க, மீரா போன்ற பக்தைகள் பட்ட கஷ்டங்களைப் படிக்கும்பொழுதும் அல்லது பக்தியுடன் ஒருவர் சொல்லி கேட்கும்பொழுதும், மனம் வேதனைப்படுகின்றது. கண்களிலிருந்து நீர் பெருகுகின்றது. மனம் இப்பொழுது முழுவதுமாக ஒரு உணர்வால் நிரம்பியுள்ளது. அந்த உணர்வுகள் அடங்கி அது இயல்பான நிலைக்கு வந்தவுடன் கேள்விகள் ஆரம்பிக்கின்றது. இந்த சரிதம் உண்மையானதுதானா? அல்லது கதை உருக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காக யாராவது கற்பனையுடன் எழுதி வைத்திருக்கின்றார்களா? என்று கேள்வி மேல் கேள்வி கிளம்பும். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அடிப்படை காரணம் என்ன? இப்படியெல்லாம் வாழ்க்கையில் துன்பத்திற்கு மேல் துன்பம் வரும்பொழுது கூட ஒருவரால் பக்தி செய்ய முடியுமா? என்பதுதான் அது. இதை நம்மால் நம்பவும் முடியவில்லை; ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை.

ஒரு நாள் ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். அது மது, போதை பொருட்களுக்கு அடிமையானவர்களைப் பற்றியது. முதலில் அதை விளையாட்டாக பழக ஆரம்பிக்கின்றார்கள். அது அவர்களுக்கு ஏதோ ஒரு மயக்கத்தை தருகின்றது. அந்த மயக்கம் அவர்களுக்கு பிடித்திருக்கவே, அதை சிறிது சிறிதாக அதிகரிக்கச் செய்கின்றார்கள். ஒரு நிலையில் அதனால் அவர்களுடைய உடல் நிலை மிகவும் பாதிக்கப்படுகின்றது. உடலில் உள்ள பல organகள் செயலிழக்க ஆரம்பிக்கின்றன. மருத்துவர்கள் அவர்களை கடுமையாக warn செய்கின்றார்கள். அவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்துவதே இல்லை. அப்பொழுது அந்த போதை பொருளையோ மதுவையோ வாங்க முடியாதபடி அவர்களை தடை செய்து கண்காணித்து வந்தாலும், அந்த தடையை மீறி அவர்கள் அதை எப்படியாவது செய்யவே பார்க்கின்றார்கள்.

சில சமயம் அந்த போதை பொருளை வாங்குவதற்கு பணம் இல்லை என்றால் அவமானம் தரும் செயல்களைக் கூட பணத்திற்காக அவர்கள் செய்ய தயங்குவது இல்லை. இந்த போதை பொருள்களை சாப்பிட்டால் ஆரோக்கியமா? இது ஏதாவது vitamin tonic போன்றதா? மாறாக உடலுக்கு ஆபத்து. ஆனால் அப்பொழுது கிடைக்கும் அந்த மயக்க நிலையை அடைவதற்காக, அதை மீண்டும் மீண்டும் செய்கின்றார்கள்.

இப்பொழுது மீரா போன்றவர்களுடைய விஷயத்திற்கு வருவோம். மீரா உலக சுகங்கள் எதற்காகவும் பக்தி செய்யவில்லை, உலக கஷ்டங்கள் விலகவும் பக்தி செய்யவில்லை, அஷ்டமா ஸித்திகளுக்காகவும் பக்தி செய்யவில்லை, கைவல்யத்திற்காகவும் பக்தி செய்யவில்லை. பின் எதற்காக பக்தி செய்தாள்? பஜனையில் அவள் நமக்கு இதுவரை அனுபவத்தில் வராத ஒரு ஆனந்தத்தை அனுபவித்ததால், அந்த ஆனந்தம் இன்னது என்று வர்ணிக்க முடியாதது. நமக்கும் புரியாதது. அதுவே பஜனானந்தம்! அந்த பஜனானந்தம் பிரும்மானந்தமே. அந்த பஜனானந்தம்தான் அவளை இப்படி படாதபாடு படுத்தி வைத்தது. அவள் அனுபவித்த ஆனந்தம் முன்பாக மற்ற எல்லாமே துச்சமானது. இதுதான் உண்மை. நம்முடைய சுயநலமும், ஆசாபாசங்களும், சுயகௌரவமும், சுயநலமும், பகவானையோ பகவானின் வைபவங்களையோ அவனுடைய க்ருபையையோ பூரணமாக அனுபவிக்க முடியாமல் செய்து விடுகின்றது.

ஜய ஜய தேவா! ஸ்ரீ ஹரி: ஜய ஜகந்நாதா!

# ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாதர் ரதோத்ஸவம்

ஸ்ரீ சைதன்ய குடீரம் | 14/07/2018 | கோவிந்தபுரம்



அலுவலகம்:

**சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா**

4/11, நேதாஜி நகர் மெயின் ரோடு, ஜாஃப்பர்கான்பேட்டை,

சென்னை 600 083. தொ.பே: +91 44 24895875

# ஸ்ரீ சைதன்ய குடீரம், கோவிந்தபுரம்

**ரதாரூடஸ்யாக்ரே பதி பதி ஜகந்நாதநகரே**
**ஹரேர்ந்ருத்யன் ந்ருத்யன் மதுரமதுரம் நாம ச ரடன்**
**லுடன் பூமௌ பக்த்யா ஸுஜனசரணேஷ்வாதரயுத:**
**கதா வீக்ஷே க்ருஷ்ணம் ஹலதரஸுபத்ராஸஹசரம் ||**
**- ஜகந்நாதாஷ்டகம் - ஸ்ரீ ஸ்ரீ அண்ணா**

**'பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்'** அவர்கள் **"ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாதரை"** ஸ்ரீ பகவன் நாமபோதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆராதனை தினமான 26.09.2007 அன்று பிரதிஷ்டை செய்தார்கள். ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாதருடன் சுபத்ரா, பலராமன், ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு, ஸ்ரீ நித்யானந்தரையும், ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் எழுந்தருளச் செய்தார்கள். அந்த இடத்திற்கு 'ஸ்ரீ சைதன்ய குடீரம்' என்று பரம க்ருபையுடன் பெயரும் அருளினார்கள். ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் க்ருபையால் அன்று முதல் இன்றுவரை தினமும் அகண்ட மஹாமந்திர கீர்த்தனம் பாகவதோத்தமர்களால் தொடர்ந்து நடந்து வருகின்றது. பூரி ஜகந்நாதருக்கு ரதோத்ஸவம் நடக்கும் அதே தினத்தில் நம் ப்ரேமிக ஜகந்நாதருக்கும் கோவிந்தபுரத்தில் ப்ரதி வருடமும் ரதோத்ஸவம் நடைபெறுகின்றது.

இந்த வருடமும் **ஸ்ரீ ப்ரேமிக ஜகந்நாதரின் ரதோத்ஸவம் ஆனி மாதம் 30ஆம் தேதி அதாவது 14/07/2018 அன்று ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவின் தலைமையில்** நடைபெறுகின்றது. பாகவதோத்தமர்கள் அனைவரும் இந்த உத்ஸவத்தில் கலந்துகொண்டு மஹாமந்திர கீர்த்தனம் செய்து குருக்ருபைக்கும், ஹரிக்ருபைக்கும் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ராதே! ராதே!!

இப்படிக்கு
தாஸன்
விஷ்ணுராதன்

# பாலகர்களுக்கு ஒரு கதை

## மீண்டும் மீண்டும்

இனிமை நிலையம் என்ற ஒரு அழகான குருகுலத்தில் அன்பே வடிவான ஒரு குரு இருந்து வந்தார். கருணையும் கூர்மையான அறிவும் ஒரே வடிவம் பூண்டு வந்தால் எப்படி இருக்கும்? அப்படித்தான் அந்த குருவும் இருந்தார்.

அவரது ஆதரவான அறிவுரைகள் பலரின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதால், பலரும் அவரை நாடி வந்த வண்ணம் இருந்தனர். எல்லொருடனும் அவரும் அன்போடு பழகி வந்தார். வருபவர்களில் இந்திரன் என்ற ஒருவர் தினமும் வாழ்வில் நடந்த ஒரே சம்பவத்தையே மீண்டும் மீண்டும் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டே இருந்தார். முன்பு சந்தோஷமாக சிரித்த முகத்துடனே இருந்தவர்தான் இவர்; இப்படி ஆகிவிட்டார். அவராக நிறுத்துகிறாரா பார்ப்போம் என்று அந்த குருவும் ஆதரவாகப் பேசி வந்தார். அவரோ மாறுவதாகத் தெரியவில்லை!

அடுத்த நாள் இந்திரன் வந்தபோது கூடியிருந்தவர்களிடம் ஒரு நகைச்சுவையான நிகழ்வை பகிர்ந்து கொண்டார் அந்த குரு. அந்த சம்பவம், அவர் கூறும் பாணி, அவர் அதை mimicry போல செய்து காட்டிய பாங்கு – இவை அனைத்தும் அனைவரையும் ‘விழுந்து விழுந்து’ சிரிக்க வைத்தது.

சில வினாடிகள் கழித்து மீண்டும் அதே நகைச்சுவை சம்பவத்தை குரு சொல்ல கூடியிருந்தவருள் மிகச் சிலரே சிரித்தனர். மீண்டும் அந்த நகைச்சுவை சம்பவத்தை அந்த குரு அதேபோல் செய்து காட்டினார். இப்போது யாரும் சிரிக்கவில்லை!

உடனே அந்த குரு இந்திரனைப் பார்த்து, “ஒரே ஜோக்கை மீண்டும் மீண்டும் கேட்கும் போது சிரிப்பு வருவதில்லை. ஆகவே, ஏன் நீங்கள் நடந்த ஒரே சம்பவத்தை நினைத்து நினைத்து மீண்டும் மீண்டும் வருந்துகிறீர்கள்?”என்றார்.


அந்த குருவின் வாக்கா? அவர் தவமா? தெரியவில்லை. அது இந்திரனின் இதயத்தை இதமாக தொட்டது. இந்திரனின் முகத்தில் மீண்டும் ஒரு புன்முறுவல் காணப்பட்டது.


**ஸ்ரீ மாதுரி சகீ மஹிளா மண்டலியின் ஸ்ரீமத் பாகவத சப்தாஹம், சேங்கனூர், 12-18 May**















மலேஷியாவில் ஸ்ரீ பாக்யாஜியின் சத்சங்கங்கள்



மலேஷியா நாமத்வாரில் ராதா கல்யாணம்





மலேஷியா பெனான்கில் சத்சங்கம்




# *The Sundaram Promise*




For over six decades, Sundaram Finance has been the Benchmark for Excellence in Customer Service, built on the strong foundations of Trust and Prudence.

Over the years, we have striven hard to safeguard the wealth of tens of thousands of investors, who have placed their faith in Sundaram Finance. We have delivered consistent and attractive returns on their hard earned money.

But above all, we have ensured Peace of Mind for three generations of depositors, who have given us their unflinching Trust.

Today, as ever, we reiterate our commitment to the timeless Sundaram Values.

**We make you THE SUNDARAM PROMISE.**

**SUNDARAM FINANCE GROUP**
*Enduring values. New age thinking.*

| Sundaram Finance | Sundaram BNP Paribas Home | Sundaram Mutual | Royal Sundaram |
|---|---|---|---|
| www.sundaramfinance.in | www.sundarambnpparibashome.in | www.sundarammutual.in | www.royalsundaram.in |

# சத்சங்க செய்திகள்

- தொகுப்பு: சிவராமன்

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் சத்சங்கங்கள்

**ஏப்ரல் 29ந் தேதி**
ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கூடுவாஞ்சேரி, ஆதனூர், அபயம் - பஜனை மந்திர் சென்று அங்கு நடைபெற்ற யோகி ராம்சுரத்குமார் நாம வேள்வியில் கலந்துகொண்டார்கள்.

**மே 1ந் தேதி**
ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பெங்களூரிலிருந்து மதுரை சென்றார்கள். மதுரை நாமத்வாரில் மீரா சரித்ரம் உபன்யாசம் செய்தார்கள்.

**மே 2ந் தேதி**
ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருப்புக்கோட்டைக்குச் சென்று பகவான் யோகி ராம்சுரத்குமார் திருக்கோயில் கும்பாபிஷேக வைபவங்களில் கலந்துகொண்டார்கள். தாயில்பட்டி சென்று அங்கு ஒரு ஸத்ஸங்கத்திலும் கலந்துகொண்டார்கள்.

**மே 4 - 10**
சென்னை, ஆழ்வார்பேட்டை நாரத கான சபா, ஸ்ரீ ஞானானந்தா ஹாலில், சாஸ்த்ரா பல்கலைகழகம் மற்றும் சாஸ்த்ரா ஸத்ஸங்கம் சார்பில் நடைபெற்ற பக்தி திருவிழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு மாலை 6.30 முதல் 8.30 வரை பக்த விஜயம் உபன்யாசம் நிகழ்த்தினார்கள். இதில் ஸ்ரீ போதேந்த்ர ஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாள், ஸ்ரீ ஸத்குரு ஸ்வாமிகள், ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகள், பக்த மீரா, ஸ்ரீ பத்ராசல ராமதாசர், ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம் பற்றிய உபன்யாசம் செய்தார்கள்.

**மே 11ந் தேதி**
ஏகாதசி - மதுரபுரி ஆஸ்ரமம்

**மே 12ந் தேதி**
ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், வடலூர் ஸ்ரீ ராமர் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். ஸ்ரீ தேவராஜ பாகவதர் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை வரவேற்றார்கள்.

## மே 12 - 13

மே 12 கடலூர், மஞ்சகுப்பம், ஸாவித்ரீ ஸதனம், நாமத்வாருக்குச் சென்று பக்தர்களுக்கு தரிசனம் தந்து ஸத்ஸங்கத்தில் கலந்துகொண்டார்கள். பிறகு அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார்கள். கடலூர், திருபாதிரிபுலியூர், ஸ்ரீ சங்கர மடத்தில் ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா சார்பில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ க்ருஷ்ண ஜனனம் மற்றும் ஸ்ரீ ருக்மிணீ கல்யாணம் உபன்யாசம் நடைபெற்றது. எண்ணற்ற பக்த பெருமக்கள் இதில் கலந்துகொண்டு அருளாசி பெற்றுச் சென்றனர்.

## மே 14ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் திருநாங்கூர் சென்று நமது ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலைக்குச் சென்றார்கள். திருவாலி சென்று ஸ்ரீ நரசிம்மர் தரிசனம் செய்தார்கள். சீர்காழி தாடாளன் சன்னதிக்குச் சென்று ஸ்ரீ திரிவிக்ரம ஸ்வாமி தரிசனம் செய்தார்கள்.

## மே 15ந் தேதி

திருநாங்கூர் திவ்யதேசங்களை சேவித்து கோவிந்தபுரம் சென்றடைந்தார்கள்.

## மே 16ந் தேதி

கோவிந்தபுரம் ஸ்ரீ பகவன்நாம போதேந்த்ராள் அதிஷ்டானத்தில் புஷ்ப அபிஷேகம் செய்தார்கள்.

## மே 17ந் தேதி

ரோஹிணீ திருநக்ஷத்திரத்தை முன்னிட்டு சேங்கனூரில் நடைபெற்ற ஸ்ரீ குருபாதுகா புறப்பாட்டிலும் நாமகீர்த்தனத்திலும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள்.

## மே 19 - 20

சென்னை அண்ணாநகரில் ஸ்ரீ பலராமன்ஜி அவர்களின் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சீதா கல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். முதல் நாள் காலையில் தோடய மங்களம், அஷ்டபதி பஜனை, மாலையில் திவ்யநாமமும் மறுநாள் காலையில் உஞ்சிவிருத்தி பஜனை, சீதா கல்யாணம் மற்றும் பவ்வளிம்பு உத்ஸவமும் நடைபெற்றது.

**மே 20 - 29**

மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் வஸந்தோத்ஸவம் நடைபெற்றது. காலையில் ஸ்ரீமத் பாகவத பாராயணமும், மாலையில் ஸ்ரீமத் பாகவத ப்ரவசனமும் இரவு வஸந்தோத்ஸவத்தில் யுகள சதகமும் நடைபெற்றது.

# சத்சங்க செய்திகள்

மழை வேண்டியும், இவ்வுலகில் அமைதியும், எல்லோருக்கும் எல்லாவிதமான நன்மைகளும் கிடைக்க வேண்டியும், நம் ஸத்குருநாதரின் பரிபூரண ஆசியுடன் வருடாவருடம் நடைபெறும் **48** நாட்கள் பகவான் யோகி ராம்சுரத்குமார் அகண்ட நாம ஜபம், **14-04-2018** தமிழ் புத்தாண்டு முதல் **31-05-2018** வரை காலை **6** மணி முதல் மாலை **6** மணி வரை சென்னை அருகில் கூடுவாஞ்சேரி, ஆதனூர் கிராமம், கபாலி பள்ளி அருகில் உள்ள அபயம் பஜனை மந்திரில் நடைபெற்றது. இதில் எண்ணற்ற பக்தர்கள் கலந்துகொண்டார்கள்.

**23-30 April** ஸ்ரீ பாக்யாஜி அவர்கள் ஸ்ரீ சிவகுமார் முரளியுடன் மலேசியாவில் சத்சங்கங்கள் நிகழ்த்தினார்கள். **Kualalumpur** மற்றும் **Penang**ல் பல இடங்களில் சத்சங்கங்கள் நடந்தன. மலேசியா நாமத்வாரில் மிக கோலாகலமாக ராதா கல்யாண மஹோத்சவம் நடைபெற்றது

---

**12-18 May** ஸ்ரீ மாதுரீ சகீ மஹிளா மண்டலி சேங்கனூரில், ஸ்ரீ ப்ரேமிக ஜன்மஸ்தானில் ஸ்ரீமத் பாகவத உதய அஸ்தமன சப்தாஹம் நிகழ்த்தியது. ஸ்ரீ விஷ்ணுப்ரியா, ஸ்ரீ ஜனனி குமாரஸ்வாமி, ஸ்ரீ பூர்ணிமா குமாரஸ்வாமி, ஸ்ரீ காயத்ரி, கன்யா சகோதரிகள் மற்றும் ஸ்ரீ ப்ரியங்கா அவர்களின் உபந்யாசமும் நடந்தது. மே **19**ம் தேதி ஸ்ரீமத் பகவத் கீதா பாராயணமும் நடந்தது.

**29 Apr - 7 May: கன்யா சகோதரிகள், திருச்சி நாமத்வாரில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹமும் பக்த விஜயம் உபன்யாசமும் நிகழ்த்தினார்கள்.**

**5-13 May: ஸ்ரீ சனத் குமார், ராமநாதபுரம்-ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி கோவிலில் ஸ்ரீமத் ராமாயண நவாஹமும் உபன்யாசமும் நிகழ்த்தினார்.**

**5-11 May: ஸ்ரீ சிவகுமார் முரளி, கடலூர் சங்கர பக்த ஜன சபாவில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹமும் உபன்யாசமும் நிகழ்த்தினார்.**

**13-19 May: ஸ்ரீ ஸ்ரீதர், ஸ்ரீ ராமர் கோவில் -திருத்துறைப்பூண்டியில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹமும் உபன்யாசமும் நிகழ்த்தினார்.**

**21-27 May: ஸ்ரீ உ வே ஸ்ரீநிவாசன், திருஅல்லிக்கேணி ஸ்ரீ ரகுமாயி சமேத ஸ்ரீ பாண்டுரங்கன் திருக்கோவிலில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹமும் உபன்யாசமும் நிகழ்த்தினார்.**

**24-30 May: ஸ்ரீ முரளிஜி, சாத்தூர் பத்திரகாளியம்மன் கோவில் வளாகத்தில் ஸ்ரீமத் பாகவத சப்தாஹமும் உபன்யாசமும் நிகழ்த்தினார்.**

**ஸ்ரீ பம்மல் பாலாஜியின் ஸத்ஸங்கங்கள்**
**ஏப்ரல் - 22 - திண்டிவனம், ஏப்ரல் - 23 - மதுரை சொக்கநாதன் தெரு,**
**ஏப்ரல் - 24 - விளாத்திகுளம், ஏப்ரல் - 25 - பசுவந்தனை,**
**ஏப்ரல் - 26 - கழுகுமலை, கோவில்பட்டி நாமத்வார், சாத்தூர்,**
**ஏப்ரல் - 27 - காரியாப்பட்டி, சிவகாசி - கோபகுடீரம் முகாம்,**
**ஏப்ரல் - 28, 29 - மதுரை,**
**மே 4, 5 தேதிகள் - சித்திரை திருவிழா - அழகர் உத்ஸவம் - நகர ஸங்கீர்த்தனம்**
**மே 13 - தேதி - அனகாபுத்தூர் பாலாஜி நகரில் ஸத்ஸங்கம்**

**மே 19 - தேதி**
**ஸ்ரீ கேசவன்ஜி திருத்தணியில் ஸ்ரீ ராம பஜனை மண்டபம், ஸ்ரீ க்ருஷ்ண பஜனை மண்டபங்களில் ஸத்ஸங்கம் நிகழ்த்தினார்கள்.**

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

‘ம்ருக’ என்பது தமிழ் மொழியிலும் ப்ரஸித்தமான வார்த்தை தான். மிருகம் - Animal என்று பொருள். ஆனால் ஸம்ஸ்க்ருதத்தில் இது ஒரு காரணப் பெயரும் கூட. ஏனென்றால் ஸம்ஸ்க்ருதத்தில் ‘ம்ருக்’ - என்ற verbக்கு ‘தேடிச் செல்வது’ என்று அர்த்தம். காட்டில் மிருகங்களை வேடர்களும், மற்ற புலி, சிங்கம் போன்றவைகளும் தேடிச் செல்வதால் - ‘‘ம்ருக்யதே இதி ம்ருக:’’ என்று, தேடப்படுவதால் ‘‘ம்ருகம்’’ என்றும் பெயர் வந்துவிட்டது.

அதே போல் எதையாவது தேடிச் செல்வதற்கு ‘‘மார்கணம்’’ என்று பெயர். அதிலிருந்து தான் ‘மார்க்’ என்ற சொல் வருகிறது. நாம் அப்படி ஒன்றை தேடிச் செல்லும்போது, நாம் செல்லும் பாதைக்கு ‘மார்கம்’ என்று பெயர். அதுவே வழக்கில் எந்த பாதைக்கும் ‘மார்க்கம்’ என்று பெயர் வந்துவிட்டது.

காளிதாஸனுடைய குமாரசம்பவம் காவ்யத்தில், பார்வதி தேவி சிவனை அடைய வேண்டி தவம் செய்கிறாள். அப்போது பரமசிவன் மாறுவேடத்தில் வந்து - ‘‘நீ ஒரு ரத்னம் அன்றோ! ரத்னம் எங்காவது தனது சொந்தக்காரனைத் தேடிச் செல்லுமா? ரத்னத்தை பெற விரும்புபவர் தானே அதை தேடிச் செல்ல வேண்டும்! நீ ஏன் இப்படி கடும் தவம் செய்கிறாய்?’’ என்று கேட்கிறார். ‘ந ரத்னம் அன்விஷ்யதி ம்ருக்யதே ஹி தத்’ - என்று ‘ம்ருக்யதே’ என்ற சொல் தேடிச் செல்வது என்ற அர்த்தத்தில் இங்கு வருகிறது.

ம்ருக

பொதுவாக ம்ருகம் என்றால் ப்ராணி என்றாலும், 'ம்ருக' என்றால் பெரும்பாலும் 'மான்' என்று பொருள் ஸம்ஸ்க்ருதத்தில். 'ம்ருகாக்ஷி' என்றால் மான் போன்ற அழகான கண்களுடையவள் என்று பொருள்.

'ம்ருகாங்க' என்றால் சந்த்ரன் (moon) ஏன் தெரியுமா? சந்த்ரனை பார்க்கும் போது, அதில் கருப்பாக சில பாகங்கள் உள்ளன அல்லவா? அதை உற்று நோக்கினால், ஒரு மான் போன்று உருவம் தெரியும். அதனால் சந்திரனுக்கு 'ம்ருகாங்க' (मृगाङ्क) என்று பெயர். அங்க (अङ्क) என்றால் சின்னம் (mark). அதனால் 'ம்ருகாங்க' என்று பெயர் வந்துவிட்டது.

'ம்ருகநாபி' என்றால் 'கஸ்தூரி' என்ற ஸுகந்த வஸ்து. கஸ்தூரி மான் என்று ஒரு மான் உள்ளது. அதனுடைய நாபியில் (தொப்புளில்) ஒரு ஸுகந்தமான த்ரவ்யம் சுரக்கும். அதற்கு தான் கஸ்தூரி அல்லது 'ம்ருக நாபி' என்று பெயர். 'ம்ருகமத' என்றும் சொல்வதுண்டு. அதைக் கொண்டு தான் பகவானுக்கு கஸ்தூரி திலகம் இடுகின்றோம். "வதன ஸுஹாஸ்ய ரஸால...." என்ற அபங்கத்தில் "ம்ருகநாபி ரேகிலா டிலா" - அதாவது கஸ்தூரியால் திலகம் (டிலா) இட்டுக் கொண்டிருக்கும் ராம என்று பாடுகிறோம். அதே போல் அஷ்டபதியிலும் "ம்ருகமத திலகம் லிகதி ஸ புளகம்" என்று 15வது அஷ்டபதியில் பாடுகின்றோம்.

அடுத்ததாக 'ம்ருகத்ருஷ்ணா' என்று ஒரு சொல் உள்ளது. இதற்கு காணல் நீர் என்று பெயர். ஏனென்றால் பாலைவனங்களில், நல்ல வெய்யிலில், ஆங்காங்கு மணலில் நீர் தேங்கி இருப்பது போல் தோற்றம் அளிக்கும். ஆனால் கிட்டே சென்று பார்த்தால் ஒன்றும் இருக்காது. அது ஒரு optical illusion, அதாவது ஒரு ப்ரமை. ம்ருகங்கள் தாகம் எடுத்தால், அங்கு தண்ணீர் கிடைக்குமோ என்று ஓடி வந்ததோ என்னவோ, 'ம்ருகத்ருஷ்ணா' என்று அதற்கு பெயர் வந்துவிட்டது போலும். ஏனென்றால் 'த்ருஷ்ணா' என்றால் தாகம் என்று அர்த்தம். ஆனால் அவை ஏமாந்து தான் போகும். தண்ணீர் இருக்காது. மகான்கள் இந்த ஸம்ஸாரத்தை மாயை என்று கூறும்போது, இந்த உதாஹரணத்தை கூறி புரிய வைப்பதுண்டு. காணல் நீர் எப்படி தெரிவது போல் தெரிகிறது, ஆனால் வாஸ்தவத்தில் இல்லையோ, அது போல் தான் இந்த ப்ரபஞ்சமும் இருப்பது போல் தோற்றம் அளித்தாலும் உண்மையில் இல்லை.

கடைசியாக 'ம்ருகபரீ்ஷ' என்ற ஒரு நக்ஷத்திரம் உள்ளதல்லவா. அதன் அமைப்பில் ஒரு மானுடைய தலை போல் அமைப்பு இருக்குமாம். அதனால் ம்ருக-பரீ்ஷ (தலை) என்று அதற்கு பெயர். இப்படியாக 'ம்ருக' என்ற பதத்தைக் கொண்டு பல சொற்கள் உள்ளன.

# பாரம்பரிய பொக்கிஷங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நியர்களின் ஆட்சிகாலத்தாலும் அரச பரம்பரையின் உதவிகள் இல்லாது போனதாலும் கதகளியானது தன்னுடைய உச்ச வளர்ச்சியிலிருந்து சிறிது சிறிதாக நலிவடையத் தொடங்கியது. சிறு களியோகக் குழுக்களும் நம்பூதிரிகளின் குடும்பங்களும் கதகளி இன்றுவரை நம்மிடையே இருப்பதற்கு மிக முக்கியக் காரணமாகும். வெள்ளினேழி என்ற கிராமத்தில் உள்ள நம்பூதிரிகள் குடும்பத்தினர் கடந்த 300 வருடங்களாக இந்தக் கலையை பாதுகாத்து வருகின்றனர். இவர்களே, கதகளியை இன்றுவரை பாதுகாத்து, சிறந்த கதகளி கலைஞர்கள் உருவாகக் காரணமாக இருக்கின்றனர். 'இதிரரிச மேனன்' என்பவரே ஒலப்பமண்ணாவின் முதல் ஆசிரியர். கல்லுழரி என்ற கதகளி வகை உருவாகக் காரணமானவரும் தற்கால கதகளியின் தந்தையாகப் போற்றப்படுபவர் மன்னா ஆவார்.



# கதகளி

‘கேரளா கலா மண்டலம்’ என்ற அமைப்பு, கேரளக் கலைகளை பாதுகாக்க, கதகளியை ஒரு உலகளாவிய கலையாக மாற்றினர்.

நம்பூதிரிகள் தொடர்ந்து கிராம விழாக்களிலும் இதர நிகழ்ச்சிகளிலும் தங்களுடைய பங்களிப்பைக் கொடுத்து வருகின்றனர். மேலும், அவர்கள் அயல் நாட்டினரை தங்களுடன் தங்குவதற்கு அனுமதித்து அக்கலையை அவர்கள் கதகளி ஆசிரியர்கள் துணைகொண்டு கற்க வழிவகை செய்கின்றனர்.

கதகளி சுட்டிக் கலைஞர்கள், கலா மண்டலம் பார்பரா விஜயகுமார் மற்றும் கதகளி கலைஞர்களால் ‘கலா சேதேன கதகளி கம்பெனி’யானது நிறுவப்பட்டது. United Kingdom மக்கள் இக்கலையினைப் பற்றி அறிய கலா மண்டலம் விஜயகுமார் ஒரு முக்கியக் காரணமாவார். இவர்களின் 30வருட கடும் உழைப்பின் பயனாக Britain னில் அனைத்து வயதினரும் இக்கலையை அறிய வழிவகை செய்துள்ளனர்.

கதகளியினைப் பற்றியதான அறிவு மற்றும் அதன் வாயிலாகப் பெறக்கூடிய ஆனந்தம் ஆகியன, அனைத்து வயதுடைய மக்களும் பெறுவதற்காக, கலா சேதேன கதகளி கம்பெனியானது ஒரு அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தன்னுடைய இந்த இலக்கை அடைவதற்காக இந்தக் கம்பெனியானது மிகவும் தகுதிவாய்ந்த கலைஞர்களை பணியில் அமர்த்துகின்றது. மேலும், பொது மக்களை கதகளிக்காக ஒப்பனை செய்யும் முறையைக் காண வரவேற்கின்றது. 1987ஆம் ஆண்டு முதல் இந்தக் கம்பெனியானது 1500 முழு அளவிலான நிகழ்ச்சிகளையும் 3000 தனிநபர் நிகழ்ச்சிகளையும் 23 ஒப்பனைக்கான பயிலரங்குகளையும் நடத்தியுள்ளது.


உலகில் உள்ள மக்களை கதகளியானது தனது சிறப்புவாய்ந்த ஒப்பனை, கடினமான மேள முறை, உணர்ச்சிவசம் செய்யக்கூடிய பாடல்கள் மற்றும் ஆற்றல் மிக்க நடிப்பு ஆகியவற்றின் மூலமாக இக்கலையானது கட்டாயம் வருங்கால சந்ததியினரை கவர்ந்திழுத்து, தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை!

# சைதன்ய மஹாப்ரபு — 21

## கயா யாத்திரை

ஓவியர் : கோவி




கண்ணை திறந்ததும் நிமாயிற்க்கு ஆச்சர்யமாக இருந்தது..
ஈஸ்வரபுரி மகாராஜ்! தாங்களா! தமது தரிசனத்தினால் நான் தன்யன் ஆனேன். எனது யாத்திரை சபலம் ஆனது.
மறு நாள்...
அறிவீர்களா! ஈஸ்வரபுரி ஸ்வாமிகள் நமது கிருகத்தை நோக்கி வருகிறாராம்..
அப்படியா? உடனே சென்று அவரை அழைத்து வரலாம்.
தங்களின் வருகை எங்களது பாக்கியமே..தயவு கூர்ந்து நமது கிருகத்திலேயே உணவு உண்ணுங்கள்
அவ்வாறே ஆகட்டும்
ப்ரேம அனுபவத்தில் திளைத்துக்கொண்டிருந்தாலும் நிமாயி சிஷ்ய பாவத்தில் ,தானே தனது கரங்களால் சமைத்தார்..
எனது வாழ்க்கை இத்தனை நாட்களாக வீணாகி விட்டது. தயை கூர்ந்து உண்மையான கிருஷ்ண பக்தி, மற்றும் மந்திரோபதேசம் செய்ய வேண்டும்.
நிமாயி! உன்னை பற்றி யாம் அறிவோம். பகவானுடைய அவதாரமாக வந்திருக்கும் உனக்கு நான் யார் மந்திரோபதேசம் செய்வதற்கு. இருப்பினும் ஒரு குருமுகமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ. நிச்சயமாக நாளையே உபதேசம் செய்கின்றேன்.


'கோபி ஜன வல்லபாய நம:'
மந்திரத்தை கேட்டதும் நிமாயி மூர்ச்சை ஆனார்.
என்னை வ்ருந்தாவனம் அழைத்துச் செல்லுங்கள். என் பிரபுவை தரிசிக்க விரும்புகிறேன்!!
தயவு கூர்ந்து தங்களை கட்டு படுத்திக்கொள்ளுங்கள்
நிமாயி ! நீ வ்ருந்தாவனம் வருவதற்கான சமயம் இது இல்லை. நவத்வீபத்திற்கு சென்று என்னுடைய நாமத்தை எல்லோருக்கும் உபதேசம் செய்! அது தான் உன்னுடைய அவதார முக்கிய காரியம் ஆகும்.. அதற்கு பிறகு சரியான சந்தர்ப்பத்தில் உன்னை வ்ருந்தாவன் அழைத்துக்கொள்வேன்!
ப்ரேம பாவத்தில் திளைக்கும் நிமாயி , வ்ருந்தாவனம் செல்ல கயாவிலிருந்து புறப்பட்டார்..
கிருஷ்ணா ! உன்னை காண இதோ வருகின்றேன்!
அசரீரியாக வந்த பகவானினுடைய கட்டளைக்கு உட்பட்டு, நிமாயி தனது இருப்பிடத்திற்கு சென்று விட்டார்.. இந்த கயா யாத்திரை நிமாயியின் வாழ்கையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது

# படித்ததில் பிடித்தது

## Padma Bhushan Dr.Nagaswamy reveals Tirukkural's Greatness

May 13, 2018
www.pgurus.com

கிறிஸ்துவ மதபோதகரான Caldwell, தனது மிகச்சிறந்த படைப்புகள் ஒன்றில், திருக்குறள் மிகப் பழமையான சாங்கிய தத்துவத்தை கற்றுத்தருகின்றது என்று கூறினார்.

மிகச் சுருக்கமாக இருப்பினும், ஆழ்ந்த கருத்துக்களை கொண்ட தமிழ் மொழியின் மிகச்சிறந்த படைப்புகளில் ஒன்றான திருக்குறள், இதுவரையில் சீரற்ற, வரிசையிலமையாத, தொடர்பின்றி எடுக்கப்பட்ட செய்யுள்களின் தொகுப்பு என்றே நமக்கு போதிக்கப் பட்டுவருகின்றது. தொன்மையான வேத உரைகளின் பாணியை (சூத்ர பாணி) பின்பற்றுவதில் தமிழ் மொழியின் மிகப் பழமையான ஆனால் இன்றும் நடைமுறையில் உள்ள தொல்காப்பிய நூலுக்கு ஒப்பாக திருக்குறள் உள்ளது.

**தமிழ் உபநிஷத் :**

திருக்குறளில் பயன்படுத்தப்படும் சூத்ர பாணியைத் தவிர திருக்குறளுக்கும் வேதங்களுக்கும் இடையே பல ஒற்றுமைகள் உண்டு. திருக்குறளின் மொத்த அமைப்பு, பல்வேறு விஷயங்களைக் கையாளும் முறை ஆகியவையும், இந்து வேத - ஆகம பாரம்பரியத்திற்கு ஏற்பவே உள்ளது.

திருவள்ளுவ மாலை, முப்பதாம் செய்யுளில், பாரதம் பாடிய பெருந்தேவனார், மற்ற இலக்கியங்களை விட திருக்குறள் உயர்ந்தது என்றும், ராமாயணம் , மஹாபாரதம், மனு தர்ம சாஸ்திரம் மற்றும் பழமையான வேதங்களுக்கு ஒப்பானது என்றும் கூறியுள்ளார் (முப்பாற்கு பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை நேர்வன)

**Self- Hate Movement:**

இந்தக் குழப்பத்திற்கு அடிப்படைக் காரணமே, திருக்குறளிற்கும் வேத சாஸ்திரங்களுக்கும் தொடர்பு உள்ளது என்று ஒப்புக்கொள்ளும் பல பாரம்பரிய விளக்க உரைகளைப் பற்றிய அறியாமையே ஆகும்.

பழங்காலத்தை சார்ந்த பல சிறந்த எழுத்தாளர்கள் திருக்குறளைப் பற்றி புகழ்ந்து மிக உயர்வாக கூறியிருக்கும் திருவள்ளுவ மாலையிலிருந்து சில செய்யுள்கள்:

i) செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே
~ வெள்ளி வீதியார், திருவள்ளுவமாலை (23)
(திருவள்ளுவரின் குறளும்,அபௌரெஷ்யா வேதங்களும் ஒன்றே.)

ii) ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்
~ மாங்குடி மருதனார், திருவள்ளுவமாலை (24)
(வேதங்களின் சாரமாக இருக்கும் திருக்குறள், சொல்வதற்கு மிக எளிதாக இருப்பினும், மிக ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டது.)

iii) ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால் — ஆரியம்
வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து.
~ வண்ணக்கஞ் சாத்தனார் (43)

(நன்கு கற்றறிந்தவர்கள், தமிழ் மொழியையும் சம்ஸ்க்ருத மொழியையும் ஒப்பிட்டு எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்று பார்க்கக்கூடாது. ஏனெனில், சம்ஸ்க்ருத மொழிக்கு வேதங்கள் இருப்பது போல், தமிழ் மொழிக்கு திருக்குறள் உள்ளது.)

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 3 ஜூன் 2018 | திண்டுக்கல் யோகி ராம்சுரத்குமார் பஜனை மடம் கும்பாபிஷேகம் |
| 8 ஜூன் 2018 | மாயம்மா சமாஜம், கன்னியாகுமாரி |
| 10 ஜூன் 2018 | ஏகாதசி |
| 13 ஜூன் 2018 | ரோஹிணி நக்ஷத்ர புறப்பாடு, சேங்கனூர் |
| 16 ஜூன் 2018 | வடலூர் ராமர் கோவில் சத்சங்கம் |
| 24 ஜூன் 2018 | ஏகாதசி |
| 2 ஜூலை 2018 | ஸ்ரீ யாதவ க்ருஷ்ணன் கோவில், தஞ்சாவூர் |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email: helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.

மதுரமுரளி



திருநாங்கூர் ஸ்ரீமதி ஜயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலை வித்யார்த்திகளுடன்
ஸ்ரீ ஸ்வாமிஜி

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/1995; Regd. No. TN/CC(S)DN/119/18-20
WPP No. TN/PMG(CCR)WPP-608/2018-2020

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 83
Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar






**SASTRA UNIVERSITY நடத்திய பக்தி திருவிழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜியின் பக்த விஜயம் உபந்யாசம், சென்னை நாரத கான சபாவில் நடைபெற்றது. விழாவில், ஹிந்து மிஷன் மருத்துவமனையின் Founder பத்மஸ்ரீ DK ஸ்ரீநிவாசன், சநாதன மதத்திற்கு ஆற்றிய சேவைக்காக ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் SASTRA UNIVERSITYயின் Vice Chancellor ஸ்ரீ சேதுராமன் அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.**

**உடன்: Dr வைத்யசுப்ரமணியம் மற்றும் ஸ்ரீ DK ஹரி**

